செ.வெ.எண்.67/ஆகஸ்ட் தேதி : 26.08.2016

**பத்திரிக்கைச் செய்தி**

**விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ. 3 இலட்சத்து 15 ஆயிரம் மதிப்பில் மானியத்துடன் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**





விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் தருமபுரி மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (26.08.2016) மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் குறித்து மனுக்கள் பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

தருமபுரி மாவட்ட பட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பண்ணை உபகரணங்கள் நெட்ரிக்கா 205, பட்டுக்கூடு அறுவடை செய்யும் இயந்திரம் -1, இளம்புழு வளர்ப்பு தட்டு -7, தண்டு அறுவடை இயந்திரம் -1, காற்று வெளியேற்றம் பேன் -1 மற்றும் மருந்து தெளிப்பான் (விசை தெளிப்பான்) -1 என 6 விவசாயிகளுக்கு தலா ரூ. 52 ஆயிரத்து 500/- மதிப்பில் ஆக மொத்தம் ரூ. 3 இலட்சத்து 15 ஆயிரம் மதிப்பில் நவீன பட்டுப்புழு தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களும், மாவட்ட பயிர் விளைச்சல் போட்டி 2015-2016ல் நிலக்கடலை, கரும்பு மற்றும் துவரை பயிரிட்டு அதிக மகசூல் ஈட்டியதற்காக 6 விவசாயிகளுக்கு பரிசு தொகைகளாக ரூ. 65 ஆயிரத்திற்கான காசோகளையும், 2 விவசாயிகளுக்கு மண்வள அட்டையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

முன்னதாக விவசாய பெருமக்களுக்கு வேளாண்மைத்துறையின் சார்பில் வழங்கப்படும் திட்டங்கள் குறித்த கையேட்டினையும், துண்டு பிரசுரங்களையும் விவசாயிகளுக்கு வழங்கி தோட்டக்கலைத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரசின் திட்டங்கள் குறித்த கண்காட்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் சிப்காட் வருவாய் அலுவலர் திரு. பஷீர், வேளாண்மை இணை இயக்குநர் திரு. ராஜேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், உதவி இயக்குநர் (பஞ்சாயத்து) திருமதி. ஆர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக

உதவியாளர் (வேளாண்மை) திருமதி. சுசீலா, கோட்டாட்சியர்கள் திரு. இராமமூர்த்தி, திரு. கவிதா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு, விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.